**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 -ம் நாள் புதன்கிழமை

**O.S. No.29/2025**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனபால் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | ராமச்சந்திரன் | கிராமம் | : | ஏரந்தவாடி |
| | | | தொழில் | : | விவசாயி |
| | | | வயது | : | 65 |

**1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்தில் பிரதிவாதிகள் வாழை மற்றும் தென்னை பயிர் செய்துள்ளார்களா என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கட்டுமானம் மற்றும் மானாவாரி பயிர்கள் மட்டுமே பயிர் செய்யக்கூடிய இடம் என்றாலும் தாவா சொத்தில் பயிர் செய்ததாக நான் சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. தாவா சொத்திலிருந்து வட்டாட்சியர் வட்டாரத்தின் நிர்வாக அதிகாரி என்ற முறையில் என்னிடம் இருந்த ஆக்கிரமிப்பை எடுத்தார் என்றால் அத்துமீறி வட்டாட்சியர் எடுத்தார். வழக்குரையில் நான் தாக்கல் செய்த ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. மாரியாயி தாவா சொத்து சம்மந்தமாக ஏதாவது ஆவணங்கள் எழுதி பதிவு செய்து கொடுத்தாரா என்றால் இல்லை. தாவா சொத்து சட்டப்படி இந்த பிரதிவாதிகளுக்கு சொந்தமானது அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் தான் இருந்தது. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றாலும் சரியான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.03 13:03:20 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal